கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.

நாள். 25.08.2025.

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**அசல் வழக்கு எண். 274/2015**

2025-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 25ம் நாள் திங்கட்கிழமை உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிவண்ணன் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | குப்புசாமி | வயது | : | 55 |
| ஊர் | : | அப்துல்லாபுரம் | தொழில் | : | பட்டு தறி |

**பி.சா.2 (மணிவண்ணன்): வாதி தரப்பில் இரண்டாம் சாட்சியின் குறுக்கு விசாரணை:**

நான் இவ்வழக்கில் 11ம் பிரதிவாதி என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் தனியாக ஒரு வழக்கறிஞரை நியமித்து ஆஜராகியுள்ளேன் என்றால் சரிதான். நான் தனியாக பதில் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் 1, 2 பிரதிவாதியாகிய கணபதி மற்றும் சேகர் ஆகியோருக்கு சாட்சி சொல்வதற்காக வந்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு நீதிமன்ற அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால் வரவில்லை. செல்லபெருமாள் என்பவர் என்னுடைய தாய்மாமன் என்றால் சரிதான். அவருடைய மனைவி பாச்சம்மாள் என்றால் சரிதான். அவர்களுடைய மகன்கள் வாதி சம்மந்தன் மற்றும் 1, 2 பிரதிவாதிகள் என்றால் சரிதான். இந்த வழக்கு விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பாச்சம்மாள் என்பவர் வாதி சம்பந்தனுக்கும் கணபதி மற்றும் சேகர் ஆகியோர்களுக்கு உயில் எழுதி வைத்த விவரம் பற்றி ஏதேனும் தெரியுமா என்றால் எனக்கு எதுவும் தெரியாது. சின்ன வயதிலிருந்தே அவர்களுடன் பேச்சு வார்த்தை இல்லை. வாதி என்பவர் மேற்படி உயில் சம்மந்தமாகத்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதியானவர் உயில் சாசனத்தில் உள்ளபடி தனக்கு பாகம் கோரியிருப்பது ஆட்சேபணை ஏதும் எனக்கு உள்ளதா என்றால் ஆட்சேபணை எதுவும் இல்லை. அதனால் மேற்படி வாதியானவர் தனக்கு தாவாப்படி

தீர்ப்பாகவேண்டும் என்று கோரியிருப்பதன்படி ஆட்சேபணை எதுவும் இல்லை என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை இத்துடன் முடிவடைகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பாா்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தாா்

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2025.08.25 15:08:31 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ)
செய்யாறு